**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC 349/2024**
LW 1PW 1

| Name | முனுசாமி | Caste | |
|---|---|---|---|
| Father's/Husband Name | காளியப்பன் | Calling | |
| Village | குருக்கத்தி | Religion | |
| Taluk | | Age | 70/2025 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **30th Day of October 2025.**

Signature of witness.

**எதிரிஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் குருக்கத்தியில் வசித்து வயது முதிர்வின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இறந்து போன ராஜேந்திரன் அவரது ஓட்டலில் வேலை செய்வதற்காக எனது வீட்டிலிருந்து அவரது இரு சக்கர வாகனத்தில் என்னை அழைத்து கொண்டு சென்றார். அவரது ஓட்டலுக்கு மிக அருகாமையில் செல்லும்பொழுது எங்களுக்கு பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்தவர் எங்களது வண்டியில் மோதி விட்டார். மோதியவுடனே நாங்கள் இருவரும் வலது புறம் விழுந்து விட்டோம். அவருக்கு மூச்சு பேச்சு இல்லாததாக பார்த்தவர்கள் சொன்னார்கள்.

2. நான் கீழே விழுந்ததில் எனக்கு பின் தலையிலும், இடுப்பிலும் அடிப்பட்டது. நான் மயக்க நிலையில் இருந்தேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோம். அங்கு வந்த போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** திருவாரூரிலிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூரில் அனுமதிக்கப்பட்ட ராஜேந்திரன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். திருவாரூரிலிருந்து மேல் சிகிச்சகைக்காக என்னை ஒரத்தூர் மருத்துவக்கல்லூரி மருததுவமனையில் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையெழுத்து செய்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. திருவாரூர் - நாகப்பட்டினம் சாலை கிழக்கு மேற்கு ரோடு என்றால் சரிதான். நாங்கள் மேற்கு நோக்கி சென்றோம் கிருஷ்ணா ஓட்டல் ரோட்டின் வலது புறம் அமைந்துள்ளது. நாங்கள் இடது புறம் சென்றோம் என்றால் சரிதான். எங்கள் இருவருக்கும் குடிப்பழக்கம் இருந்ததா என்றால் எனக்கு குடிப்பழக்கம் இல்லை. ராஜேந்திரன் என்றாவது குடிப்பார். இறந்து போன ராஜேந்திரனுக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. இறந்து போன ராஜேந்திரன் விபத்தின் போது மது அருந்தியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இடது புறத்திலிருந்து வலது புறத்திலிருநத கடைக்கு செல்வதற்காக வாகனத்தை திருப்பும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்து இறந்து போன ராஜேந்திரனின் அஜாக்கிரதையாலும்,

கவனக்குறைவாலும் தான் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி முறையாக ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தவர் என்றாலும் அவரது கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. பட்டியல் சாட்சி 2 நீலமேகம் இறந்து போன நபரின் நண்பர் என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,-
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC 349/2024**

LW 2 PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | நீலமேகம் | Caste | |
| Father's/Husband Name | கிருஷ்ணசாமி | Calling | |
| Village | ராதாநல்லூர் | Religion | |
| Taluk | | Age | 73 /2025 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **30th Day of October 2025.**

Signature of witness.

**எதிரிஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் ராதாநல்லூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை சம்பவத்தன்று பார்த்தேன். இரு சக்கர வாகனத்தில் பின்னால் இருவரை அமர வைத்து கொண்டு ஓட்டி வந்தார். கடந்த 18.11.2023 ம் தேதி மாலை சுமார் 4, 4.30 மணியளவில் நான் என் வீட்டு வாசலில் அமர்ந்திருந்தேன். அப்போது எனது வீட்டிற்கு எதிரே உள்ள ஓட்டலின் ஓனர் அவரது இரு சக்கர வாகனத்தில் அ.சா. 1 ஐ அழைத்து கொண்டு மேற்கு நோக்கி வந்து அவரது கடைக்கு செல்வதற்காக

பின்னால் அமர்ந்திருந்தவர் கை காட்ட வலது பக்கம் திரும்பி அவரது கடையின் அருகே சென்று விட்டார்.

2. அப்போது ஆஜர்எதிரி பின்னால் வந்து மோதி விபத்து ஏற்படுத்தினார். விபத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தார். இறந்து போன ராஜேந்திரன் பைக்குடன் கீழே விழுந்தார். விபத்தில் ராஜேந்திரனுக்கு தலையில் மற்றும் நெஞ்சில் அடிப்பட்டிருந்தது. அசா. 1க்கு தலையில் அடிப்பட்டிருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சம்பவ இடத்திற்கு எதிரே ஒரு மாடி வீடும் இரண்டு ஓட்டு வீடுகளும் உள்ளது., விபத்து நடந்த சமயத்தில் நான் எந்த வீட்டில் இருந்தேன் என்றால் ஓட்டு வீட்டு வாசலில் இருந்தேன். ஓட்டு வீட்டு வாசலில் மரவாடி ஒன்று உள்ளது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் சென்று பார்த்தேன். விபத்தில் இறந்து போன ராஜேந்திரன் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். இறந்து போன ராஜேந்திரனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். இறந்து போன ராஜேந்திரன் அவரது கடைக்கு அருகே சென்ற பின்பு

தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் . இறந்து போன ராஜேந்திரனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

2. எனது வீட்டிலிருந்து பார்த்தால் மரவாடி மறைத்து விடும் என்பதால் ரோடு தெரியாது என்றால் சரியல்ல. இந்த விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் அல்லது கவனக்குறைவினால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து இறந்து போன ராஜேந்திரனின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி முறையாக ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தவர் என்றாலும் அவரது கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,-
கீழ்வேளூர்.